**பன்வில பிரதேச சபையின் - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பன்வில பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அகுரண பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொள்வனவு செய்ப்பட்டிருந்த ரூபா 118,200 ஆன 06 புல்வெட்டும் இயந்திரங்களின் பெறுமதி ரூபா 67,500 என ரூபா 50,700 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்வதற்கு தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 நிர்மாண கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 8,162,675 மற்றும் நிர்மாண கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 14,359,702 ஆக இருந்தமையால் மீதிளுக்கு இடையே ரூபா 6,197,027 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்வதற்கு தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 04 பெறவேண்டிய கணக்குகளின் மொத்தம் ரூபா 33,731,526 ஆக இருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் அம்மீதி ரூபா 29,585,357 ஆக இருந்தமையால் ரூபா 4,146,169 ஆன வேறுபாடு காணப்பட்டது. | நீதிமன்றத் தண்டப்பணக் கட்டணங்கள், சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், நானாவித கடன்பட்டோர் முறைப்பாட்டு செயற்குழு கட்டணங்கள், இறைச்சிக் கடைகளின் வாடகையில் நிலுவை கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டாமையால் வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளதாக அறிக்கப்பட்டிருந்தது. | வருமான பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகளுடன் ஒப்பிட்டு சரியாக சமர்ப்பிக்க வேண்டியதுடன் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 10,804,621 ஆன 02 வருமான விடயங்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதறகாக ஆளுனரின் அங்கீகாரம், அட்டவணைகள் மற்றம் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை | நீதிமன்றத் தண்டப்பணக் கட்டணங்கள், சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் நானாவித கடன்பட்டோர், கடை வாடகை அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்குரிய அட்டவணைகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் ஏனைய தேவையான அனைத்து தகவல்களும் வழங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,716,823 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,491,664 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான நிதி சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துவதற்கு அல்லது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சட்டத்தின் 131 ஆம் பிரிவின் பிரகாரம் மிகை நிதியை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அரச வங்கியொன்றில் பராமரித்துச் செல்லும் நடைமுறைக் கணக்கில் | மிகை மதிப்பீடொன்று இருந்தால் குறைநிரப்பு மதிப்பீடொன்ற தயாரித்து அதன் மூலம் பொது மக்களுக்கு சேவை செய்வதற்கும் அல்லது பிணை முறிகளில் முதலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபை நிதியத்தை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பயன்படு:த்துவதற்கோ அல்லது மிகைப்பணத்தை முதலீடு செய்து வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மாதாந்தம் ரூபா 9,759,665 முதல் ரூபா 17,070,548 வரையான வீச்சில் பணம் மீளாய்வாண்டு முழுவதும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

#### (அ) வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 1,631,409 ஆன இறுதி வரை நிலுவை வீதவரி வரி மீதியில் ரூபா 1,177,363 தொகையும் ஆண்டில் பட்டியலிடல் ரூபா 2,756,454 இல் ரூபா 1,116,699 தொகையும் ஆண்டின் போது அறவிடப்படா திருந்தமையால் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 2,294,063 ஆக இருந்தது. பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவை மீதிகளை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது நடாமடும் சேவைகள் போன்ற வேலைத்திட்டங்கள் நடாத்தி எவ்வாறாயினும் குறித்த நிலுவையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### (ஆ) கடை வாடகை

| | | |
|---|---|---|
| பன்வில பொது சந்தை கடைத்தொகுதியில் அமைந்துள்ள 30 கடைகளுக்குரியதாக 2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய மதிப்பீடு 2019 சனவரி மாதம் செயற்படுத்தியதன் பின்னர் எந்தவொரு கடை உரிமையாளரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கடை வாடகை எதுவும் கொடுப்பனவு செய்யாமை காரணமாக ரூபா 3,582,600 ஆன நிலுவை காணப்பட்டதுடன் ஒவ்வொரு கடைக்குரிய ரூபா 118,600 இனை மிகைத்த நிலுவையொன்று காணப்பட்டது. எனினும் இந்த நிலுவை தொகையை அறவிடுவதற்கு உரிய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிலுவைப் பணத்தையும் சட்டரீதியாக நீதிமன்றத்தினூடாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் புதிய உடன்படிக்கைகளை மேற்கொண்டு மதிப்பீடு செயற்படுத்த வேண்டியதுடன் நிலுவை தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பம் முதல் நிலுவை முச்சக்கர வண்டி நிறுத்துமிடக் கட்டண மீதி ரூபா 421,675 மற்றும் ஆண்டின் பட்டியலிடல் ரூபா 240,500 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் நிலுவையிலிருந்தும் பட்டியலிடலிருந்தும் அறவீடு ரூபா 132,800 மாத்திரமாக இருந்தமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவை ரூபா 529,375 ஆக இருந்தது. | நிலுவை பணத்தை எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உப விதிகளின் பிரகாரம் முச்சகர வண்டி நிறுத்துமிடங்களிலிருந்து முறையாக வருடாந்த கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,404,748 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சபைக்குரிய நக்கில்ஸ் பம்பரல்ல சுற்றுலா கேந்திரத்திலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை எவ்வித வருமானமொன்றும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியின் போது பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மார்ச் மாதம் அளவில் நாட்டில் காணப்பட்ட தொற்று நிலைமை மற்றும் போதிய ஊழியர்கள் இல்லாமையால் சுற்றுலா பிரயாணிகளுக்காக வசதிகள் வழங்கும் இடமொன்று இல்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமானத்தை உழைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 11,184,177 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த சபைக்குரிய ஹுலுகங்க பார்வையாளர் கூடம் மற்றும் அதனுடன் அண்மித்து | ஹுலுகங்கவில் அமைந்துள்ள பார்வையாளர் கூடத்துடன் கூடிய சுற்றுலா கேந்திர கட்டிடத்தின் பிரதான வீதிக்கு சமாந்திரமாக அமைந்துள்ள | வருமானத்தை உழைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | அமைந்துள்ள 3 மாடிகளுடன் கூடிய கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,302,814 ஆன செலவினமொன்று செலவிப்பட்டிருந்ததுடன் அக்கட்டிடம் எவ்வித வருமானம் ஈட்டல் நடவடிக்கைக்காக பயன்படுத்தாமல் 2022 மார்ச் 15 கணக்காய்வு திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன. | மாடி ரூபா 30,000 இற்கும் முதலாவது நிலமாடி ரூபா 6,000 இற்கும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேற்படி கட்டிடத்தின் நிலமாடி மற்றும் முதலாம் மாடி ஆகிய இரண்டு பகுதிகளும் மக்கள் வங்கிக்கு குத்தகை அடிப்படையில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பொதுச் சபை அங்கீகாரமும் கிடைத்துள்ளது. | வேண்டும். |
| (இ) | வாரச் சந்தையொன்றை நடாத்திச் செல்வதற்காக பொருத்தமற்ற காணியொன்றை தெரிவு செய்து 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,500,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹூலுகங்க வாரச்சந்தை கட்டிடத்தை குத்தகைக்கு வழங்கியதால் 2015-2021 ஆம் ஆண்டுகளில் மிகவும் குறைந்த வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த இடத்தில் கடைகளை நிர்மாணித்து புதிய வருமானம் உழைக்கும் வழியொன்றாக பயன்படுத்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதும் எவ்வித செயற் திட்டமொன்றும் செயற் படுத்தப்பட்டிருக்கவில்லை. | வாரத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் வாரச்சந்தை நடாத்தப்பட்டு வியாபாரிகளிடமிருந்து கிடைக்கும் வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | புதிய வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |